கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் வசிக்கும் பல லட்சம் பொதுமக்கள் நலனை அடிப்படையாக கொண்டு, " பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership)" மூலமாக, பொதுமக்கள் பூங்கா அமைக்கலாம். உரிய தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு அடிப்படையில் மேற்காண் பொது மக்கள் பூங்கா நிர்மானம் செய்ய EOI (Expression of Interest) விருப்பு கேட்பு அறிக்கை) வேண்டுதல் அறிவிப்பு செய்யலாம்.

இப்பூங்காவிற்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பொதுமக்கள் பூங்கா என பெயர் வைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க. எண்- 9515 /2008/எச்1 (மே)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 241 நாள் : 29.09.2008</u>

1. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 18.50 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்கா மற்றும் பள்ளி மாணவர்கள் பயிற்சி எடுக்கும் வகையில் விளையாட்டுத்திடல் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

2. அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பூங்கா என பெயரிடவும் தீர்மானிக்கப்பட்டது.

3. அமைக்கப்படவுள்ள பூங்காவை எந்த முறையில் (மாநகராட்சி நிதி மூலமாக பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலமாக) அமைக்கலாம் என்பது குறித்து பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 7

கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஐந்து பகுதிகளில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங் உள்ள இடங்களில் இரயில்வே கடவுகளுக்கு பதிலாக உயர் மட்ட/ அடி மட்ட பாலம் ரூ. 91.00 கோடி செலவில் அமைக்க அரசு ஆணை (நிலை) எண்: 272 நெடுஞ்சாலைத் துறை (எச்.க்யூ 2) நாள் 13.11.2007 –ல் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ. 768.07 கோடி செலவில் முக்கிய சாலை சந்திப்புகளில் நான்கு (4) மேம்பாலங்கள் மாநகரின் உட்புற 19 எண்ணிக்கை கொண்ட சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், 18 எண்ணிக்கை கொண்ட முக்கிய போக்குவரத்து மிக்க சாலைகளின் ஓரங்களிலுள்ள நடைபாதைகளை மேம்படுத்தும்பணி, கேபிள், தொலைபேசி இணைப்புகள் செல்லும் கேபிள் செல்ல புதை கான்கிரீட் பாதைகள், முக்கிய சாலை ஓரங்களில் அமைக்கவும், 15 கி.மீ நீளமுள்ள துரித பேருந்து பாதை (BRTS) அமைக்கவும் திட்ட மதிப்பீடு தொழில்நுட்ப ஆலோசக நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு 18.01.2008–ல் மாநில வழிகாட்டுதல் குழு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தில், ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டப்பணிக்கு ஒப்புதல் பெறப்படாத நிலையில் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் இப்பணியினை, உடன் நெடுஞ்சாலைத் துறையே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக் கோரி அரசிற்கும், தலைமைப்பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை அவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஐந்து இடங்களில் இரயில்வே கடவுகளுக்கு பதிலாக இருப்புப்பாதையின் கீழ் செல்லத்தக்க வகையில் கீழ்பாலம் மற்றும் மேல்பாலங்கள் நெடுஞ்சாலைத் துறையே மேற்கொள்ள கேட்டு மாமன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | இரயில்வே கிமீ 3/21/23 – ல் இருகூர் – பீளமேடு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 5 க்கு மாற்றாக நீலிக்கோனாம் பாளையம் – SIHS காலனி சாலை கி.மீ. 1/6 ல் சாலை மேம்பாலம் அமைத்தல். | 17.00 |
| 2 | இரயில்வே கிமீ 85/1–3 – ல் இருகூர் – பீளமேடு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 8 க்கு மாற்றாக பீளமேடு – விளாங்குறிச்சி சாலை கி.மீ. 0/4 ல் சாலை மேம்பாலம் அமைத்தல் (பீளமேடு அருகில்). | 20.00 |
| 3 | இரயில்வே கிமீ 10/19–20 –ல் பீளமேடு – கோயம்புத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 9 க்கு மாற்றாக கணபதி – ஆவாரம்பாளையம் – சாலை கி.மீ. 0/6 ல் மேம்பாலம் அமைத்தல் (ஆவாரம்பாளையம்). | 20.50 |
| 4 | இரயில்வே கிமீ 12/19–21 –ல் பீளமேடு கோயம்புத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 11க்கு மாற்றாக காந்திபுரம் 7வது தெரு விரிவாக்கத்தில் உள்ள இரத்தினபுரி சாலை கி.மீ. 1/0 ல் சாலை மேம்பாலம் அமைத்தல் (இரத்தினபுரி). | 19.50 |
| 5 | இரயில்வே கிமீ 13/25–27 –ல் பீளமேடு கோயம்புத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 13 க்கு மாற்றாக காந்திஜி சாலை (தயிர் இட்டேரி – கண்ணப்பன் நகர்) கி.மீ. 0/2 ல் சாலை கீழ்பாலம் அமைத்தல். | 14.00 |
| | மொத்தம் | 91.00 |

அலுவலக குறிப்பு: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை மற்றும் சாலை மேம்பாட்டுத் திட்ட மதிப்பீடு ரூ. 768.07 கோடி செலவில் தயாரிக்கப்பட்டு, மாநில வழிகாட்டுதல் குழு ஒப்புதலுக்கு அனுப்பி உள்ள நிலையில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 5 இடங்களில் இரயில்வே லெவல் கிராஸிங் பகுதியில் இரயில்வே கடவுகளுக்கு பதிலாக உயர்மட்ட/கீழ்மட்ட பாலங்கள் ரூ.91.00 கோடி செலவில் அமைக்க அரசு ஆணை எண். 272, நெடுஞ்சாலைத் துறை (எச்.க்யூ 2) நாள்: 13.11.2007–ல் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பயன்பெறும் இப்பணியினை நெடுஞ்சாலைத் துறையே மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 12303/07 MD 3 (JN 3)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 242 நாள் : 29.09.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 8

கோவை மாநகராட்சியில் எல்லைக்குள் வாகன நெரிசல் மிக்க சாலைகளில், மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் போதிய அளவு நிறுத்த தக்கவாறு, அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் நகர அபிவிருத்தி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இத்திட்ட மதிப்பீட்டினை தகுதி வாய்ந்த தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனங்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க முன்மொழிவு கோரும் அறிவிப்பு (Request For Proposal) இருமுறை கோரப்பட்டு கலந்தாலோசக நிறுவனங்கள் முன்வராததால் மூன்றாம் முறையாக கடந்த 30.03.07–ல் கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டது.

1. *M/s PADGRO Consultancy Pvt Ltd., Chennai*
2. *M/s. Infrastructure Professional Enterprises (P)Ltd., New Delhi*
3. *M/s. COS Consultancy Services, Madurai*
4. *Bhalla Ribetro Bhalla Architects Pvt Ltd, New Delhi*

தேர்வு செய்யப்படும் நிறுவனத்தின் மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் மாநில மற்றும் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு ஒப்புதல் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் 28.06.2007–ல் புது டில்லியில் நடைபெற்ற மத்திய நகர்புற வளர்ச்சித் துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில், திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிற திட்டங்களுக்கு ஒப்புதல் பெறும் சமயத்தில் அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைப்பதற்கு தொழில்நுட்ப கலந்தாலோசகர் நிறுவனம் மூலம், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி குறித்தும், இப்பணிக்கு JNNURM திட்டத்தின் கீழ் நிதிஒதுக்கீடு குறித்தும் பிற மாநிலத்தில் திட்டத்தினை செயல்படுத்தும் உள்ளாட்சி பிரதிநிதிகளால் சந்தேகங்கள் எழுப்பபட்டது. அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் திட்டம், வருவாய் ஈட்டும் இனமாக கருதப்படுவதால், இப்பணிக்கு மத்திய அரசின் JNNURM திட்டத்தின் கீழ் மானிய தொகை வழங்க இயலாது என மத்திய ஒப்புதல் வழங்கும் குழு தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டு, இத்திட்டத்தினை தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய திட்டத்தின் கீழ் (Public & Private Partnership) செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. அதற்கேற்ப 30.03.07–ல் நான்கு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப ஆவணங்கள் மாநகராட்சியால் பரிசீலிக்கப்படவில்லை.

மாமன்றம் தனது தீர்மானம் எண். 155, நாள் 25.09.2007ல் கிராஸ்கட் சாலை மற்றும் ஆர்.எஸ்.புரம் பகுதி மாநகராட்சி காலி இடத்தில் திட்டவடிவமைப்பு செய்து, அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் வணிக வளாகத்துடன் கட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் மாநகராட்சி வசம் திருப்பி ஒப்படைப்பு செய்தல் (DBOT) என்ற முறையில் வணிக வளாகத்துடன், அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கத் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விருப்ப கேட்பு அறிக்கை (E.O.I) பெற ஒப்புதல் அளித்தது.

கடந்த 05.03.2008ல் தாக்கல் செய்யப்பட்ட பயன்பாட்டுக்குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்டத்தில் போக்குவரத்து நெரிசலான சாலைகளான மூன்று இடங்களின் முறையே சீனிவாசபுரம், திவான் பகதூர் சாலை மற்றும் டவுன் ஹால் பகுதிகளில் முற்றிலும் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP mode) அடிப்படையில் வணிக வளாகத்துடன் கூடிய அடுக்குமாடி கார் நிறுத்துமிடங்கள் நிறுவி பராமரித்து ஒப்படைத்தல் அடிப்படையில் அமைக்க விவாதிக்கப்பட்டு மாமன்றம் தனது தீர்மானம் எண் 266 நாள் 07.03.2008–ல் ஒப்புதல் வழங்கியது.

தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் இணைந்து புதியதாக வணிக வளாகங்களுடன் கூடிய அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடங்கள் மாநகராட்சி பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல் மிக்கதும், வருவாய் தரத்தக்க மூன்று இடங்களான 1) கிராஸ்கட் சாலை சீனிவாசபுரத்தில் 2.30 ஏக்கர் பரப்பளவிலும், 2) ஆர்.எஸ். புரம் திவான் பகதூர் சாலை பகுதியில் 1.51 ஏக்கர் பரப்பளவிலும், 3) டவுன் ஹால் பகுதியில் 1.00 ஏக்கர் பரப்பளவிலும் உள்ள மாநகராட்சி காலி இடங்களில் அமைக்க முன் வருகிறார்களா என்பது குறித்து, ஏற்கனவே தேசிய அளவில் செய்து முடித்து அனுபவம் பெற்ற தகுதியான நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப தகுதி மற்றும் அனுபவம் குறித்து விருப்ப கேட்பு அறிக்கை (Expression of Interest) பெற விளம்பரம் தேசிய அளவிலான நாளிதழ்கள் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட்டு 07.03.08–ல் கீழ்கண்ட எட்டு நிறுவனங்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டன.

1) *M/s Simplex Projects Ltd., Kolkatta.*
2) *M/s Gupta Bros,( India)New Delhi (JV) JCL International Ltd., New Delhi.*
3) *M/s ETA Construction (I)Ltd., Chennai*
4) *M/s Ramky Infrastrutures Ltd., Hyderabad. (JV) Global Engineers (India) Pvt., Ltd., Bangalore.*
5) *M/s. P.S.K. Engg.Cons. Consortium, Tiruppur,(JV)JCL International L TD., New Delhi.*
6) *M/s IVRCL Infrastructure and Project Ltd., Hyderabad. (JV) Global Engineers (India) Pvt.,Ltd., Pune.*
7) *M/s Team Venture and Marketing Ltd., Hyderabad. (JV) Wohr parking systems Pvt.,Ltd ., Pune.*
8) *M/s Subash Projects and Marketing Ltd., Bangalore (JV) Ram Ratna Infrastructure Pvt., Ltd., Mumbai.*

பெறப்பட்ட எட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி , அனுபவங்கள் மற்றும் பணி விபரங்கள் குறித்து மாநகராட்சி தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு, கூர்ந்தாய்வு செய்து கீழ்காணும் இரு நிறுவனங்களை தேர்வு செய்தது.

1) *M/s Gupta Bros,( India)New Delhi (JV) JCL International Ltd., New Delhi.*

2) *M/s. P.S.K. Engg.Cons. Consortium, Tiruppur,(JV)JCL International Ltd., New Delhi.*

மாநகராட்சியில் முதன்முறையாக இத்திட்டப்பணி தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) செயல்படுத்தப்பட உள்ளதால் தேர்வு செய்யப்பட்ட இரு நிறுவனங்களுக்கும் முன்மொழிவுகள் கோரும் அறிக்கை (Request For Proposal) வழங்கப்படுவதற்கு முன்பு முன்மொழிவு தொடர்புடைய ஆவணங்களில் கூடுதல் நிபந்தனைகள் மற்றும் கூடுதல் ஷரத்துகள் குறித்து சட்ட விதிகளின் படி சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தீர ஆராய்ந்து வழங்க அரசின் அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் மூலமாக சமர்பிக்கப்பட்டது.

அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், தேர்வு செய்யப்பட்ட இரு நிறுவனங்களுக்கு முன்மொழிவுகள் கோரும் அறிக்கை வழங்கவும், மேற்படி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களின் விபரங்கள் மற்றும் சாராம்சம் மாமன்றத்தின் பார்வைக்கும், விவாதத்திற்கும் வைக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படும் நிறுவனத்திற்கு பணி ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அ) மாமன்றம் தனது 07.03.2008–ம் தேதிய தீர்மான எண் 266–ல் பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்டத்தில் போக்குவரத்து நெரிசலான மூன்று இடங்களான சீனிவாசபுரம், திவான் பகதூர் சாலை மற்றும் டவுன் ஹால் பகுதியில் பொதுமக்கள்/தனியார் பங்களிப்புடன் வணிக வளாகத்துடன் கூடிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளதால் இம்மூன்று இடங்களிலும் பொதுமக்கள்/தனியார் பங்களிப்புடன் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் (PPP Mode) அமைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) முதன்முறையாக பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் மாநகராட்சியால் அமைக்கப்பட உள்ளதால் முன்மொழிவுகள் கோரும் அறிக்கை தொடர்புடைய ஆவணங்கள், ஷரத்துக்கள் அரசிற்கு அனுப்பி ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 41102/06/MD 3/JN

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 243 நாள் : 29.09.2008</u>

**1.** கோவை மாநகராட்சிக்குட்பட்ட சீனிவாசபுரம், திவான் பகதூர் சாலை, டவுன்ஹால் பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP முறையில்) வணிக வளாகங்களுடன் கூடிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் DBOT அடிப்படையில் அமைக்க ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**2.** முதன் முறையாக பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் DBOT அடிப்படையில் வணிக வளாகத்துடன் கூடிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் மாநகராட்சியால் அமைக்கப்பட உள்ளதால், அதற்குரிய முன்மொழிவுகள் கோரும் அறிக்கை தொடர்புடைய ஆவணங்களை (RFP document with Lease agreement and Concession agreement) அரசிற்கு அனுப்பி ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

**3.** அரசின் ஒப்புதல் பெற்றபின் மாமன்ற ஒப்புதலுடன் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப கூர்ந்தாய்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு முன்மொழிவு கோரும் அறிக்கை (RFP) வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**4.** மேற்படி நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்பட்டு மாநகராட்சிக்கு வழங்கப்படும் ஆவணங்களை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்பித்து ஒப்புதல் பெற்றபின்பு, பணி ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 9**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் அழகேசன் ரோட்டில் உள்ள நகரியல் பயிற்சி மையத்தில் (Institute of Urban Studies) ரூ. 1.50 கோடி செலவில் தங்கும் விடுதியை மாநகராட்சி மூலமாக கட்டித்தர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடித எண். 30325/08/E1 நாள் 14-07-2008 –ல் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

எனவே, மேற்படி கட்டிடத்தை கட்ட வசூலிக்கப்படும் சேவைக்கட்டணம் (Centage Charges) வசூலிப்பதிலிருந்து விலக்கு அளித்திடவும் மேற்படி கட்டிடத்தை மாநகராட்சி மூலமாக கட்டித்தர அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 12902/08/MD 4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 244 நாள் : 29.09.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 36-க்குட்பட்ட கிருஷ்ணசாமி சாலை சீத்தாலட்சுமி மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையில் வடபுறம் உள்ள பழுதான ஏசி சீட் கூரை மற்றும் ஓட்டுக்கூரை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும் மற்றும் உபயோகமற்ற மருத்துவ உபகரணங்களை எடுத்துக் கொள்ளவும் 05.09.08-ல் ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இதில் ஒப்பந்தப்புள்ளி மூலம் அதிகபட்ச தொகையாக ரூ. 71,000/- க்கு கொடுத்துள்ள திரு. O.A. செய்யது இப்ராஹிம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க 17.09.2008-ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள இப்பொருளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி பின்ஏற்பு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண். 15685/07/MD 4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 245 நாள் : 29.09.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 11**

கோயமுத்தூர் மாநகராட்சி வார்டு பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கட்டி உபயோகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்,(ISP Toilets) தற்போது அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில கழிப்பிடங்கள் நன்றாக பராமரிக்காமலும், ஒருசில கழிப்பிடங்கள் மகளிர் சுயஉதவிக்குழு என்ற பெயரில் தனி நபர்களிடம் உள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதுபோன்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டி வேறு சுய உதவிக்குழுக்களுக்கு மாற்றம் செய்துதரக்கோரி அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றன. அவ்வாறு கழிப்பிட பராமரிப்பினை மாற்றம் செய்திட தெரிவித்தால், சில மகளிர் சுயஉதவிக்குழுவினர் மாற்றம் செய்திட மறுப்பு தெரிவிக்கின்றனர்.

இவற்றினை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ள கழிப்பிடங்களை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதித்து அதன் அடிப்படையில் நிர்வகிக்க அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. ஒவ்வொரு கழிப்பிடமும் அப்பகுதியிலுள்ள ஓர் மகளிர் சுயஉதவிக்குழுவிடம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் பராமரிக்க அனுமதிக்கப்படும்.

2. இரண்டு ஆண்டுகள் முடிவுற்றபின் அப்பகுதியிலுள்ள வேறு ஒரு மகளிர் குழுவிடம் பராமரிப்பிற்கு ஒப்படைக்க ஏதுவாக மாநகராட்சி பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.

3. கழிப்பிட அன்றாட பராமரிப்பு, சுத்தம் செய்தல், சிறுபழுதுகள், ஊதியம் மற்றும் மின்கட்டணம் போன்றவற்றை கழிப்பிட வருவாயிலிருந்து செய்ய வேண்டும்.

4. அன்றாட செலவுகள்போக மீதி தொகை அந்தந்த குழுக்களின் தனி வங்கி கணக்கில் இருப்பு வைக்க வேண்டும்.

5. கணக்கில் உள்ள தொகையினை மாநகராட்சி சமுதாய அமைப்பாளருடன் ஆலோசனை செய்து பொது உபயோகத்திற்கு மட்டுமே செலவிட வேண்டும்.

6. கழிப்பிடங்களை சுத்தமாக நன்கு பராமரிக்க வேண்டும்.

7. மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளை ஏற்று செயல்படுத்த வேண்டும்.

8. மாநகராட்சி ஆணையர் பிறப்பிக்கும் உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

9. பராமரிப்பு குறை மற்றும் இதர குறைகளுக்காக கழிப்பிடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரினால் உடன் ஒப்படைக்க வேண்டும்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 8909/2008/ அ 5(தெ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 246 நாள் : 29.09.2008</u>

சுகாதார நிலைக்குழுவின் ஒப்புதலோடு மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் உரக்கிடங்கில் பத்தாயிரம் மரக்கன்றுகள் நட்டு பராமரித்துத் தருவதாகவும், அதற்கு அனுமதி வழங்குமாறு சிறுதுளி அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வெள்ளலூர் உரக்கிடங்கில் மரம் வளர்த்தால் அப்பகுதி முழுவதும் ஒரு பசுமை வளையம் ஏற்படும். அதனால் மாசு குறைவதுடன் நல்ல இயற்கை சூழ்நிலை நிலவும். எனவே சிறுதுளி நிர்வாகத்திற்கு மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க அனுமதி வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 8911/08 தெ

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 247 நாள் : 29.09.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 13

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. எக்ஸ்.பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர், கே.கே.புதூர் நல மையம் – சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

பார்வை :-1) திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர், கே.கே.புதூர் நகர் நல மையம் அவர்களின் விண்ணப்பம் நாள் 22.01.2008.

2) மன்றத் தீர்மான எண். 109 நாள் 17.06.2008.

3) திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர், கே.கே.புதூர் நகர் நல மையம் அவர்களின் விண்ணப்பம், நாள் 25.07.2008.

*****

பார்வை 1 –ல் கண்ட திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர், கே.கே.புதூர் நகர்நல மையம் அவர்கள் தன்னுடைய சொந்த ஊர் சென்னை என்பதாலும், தன்னுடைய பெற்றோருக்கு வயதாகி விட்ட காரணத்தினால் அடிக்கடி உடல்நலம் பாதிப்பு அடைவதால் அவர்களை பார்த்துக் கொள்ள யாரும் இல்லை எனவும், இதனால் தன் குடும்பத்தை விட்டு தனியாக வசிப்பதால் மிகுந்த மனச்சோர்வுக்கு ஆளாவதாகவும் மற்றும் தன் குடும்பத்தாரின் நிலைமையை காரணமாகக் கொண்டு தனக்கு சென்னையில் ஏதாவது ஒரு சுகாதார மையத்திற்கு மாறுதல் செய்து தரும்படி விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர் அவர்களை சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்வதற்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது.

பார்வை 2-ல் கண்ட மன்றத் தீர்மானத்தில் விண்ணப்பதாரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது என்றும் காலியாக உள்ள பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடங்களை நிரப்பிய பின்பு கோரிக்கையினை பரிசீலனை செய்யலாம் என தெரிவித்துள்ளது.

தற்பொழுது இம்மாநகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் 23.08.2008ம் தேதியன்று 17 பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமதி எக்ஸ். பிலோமினா, பலநோக்கு சுகாதார பணியாளர் பார்வை 3-ல் கண்ட விண்ணப்பத்தில் மீண்டும் சென்னை மாநகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளார்.

எனவே, திருமதி எக்ஸ். பிலோமினா, அவர்களை சென்னை மாநகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு மீண்டும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.1265/07/எம்சி.3.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 248 நாள் : 29.09.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 14

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. பி. மகேஸ்வரி, பல நோக்கு சுகாதார பணியாளர், செல்வபுரம் நல மையம் – தாராபுரம் நகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

பார்வை :-1) திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர், செல்வபுரம் நகர் நல மையம் அவர்களின் விண்ணப்பம் நாள் 01.02.2008

2) மன்றத் தீர்மான எண். 108 நாள் 12.06.2008

3) திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர், செல்வபுரம் நகர் நல மையம் அவர்களின் விண்ணப்பம்.

*****

பார்வை 1 –ல் கண்ட திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர், செல்வபுரம் நகர்நல மையம் அவர்களின் விண்ணப்பத்தில் தான் தினமும் தாராபுரத்தில் இருந்து பணிக்கு வந்து செல்வதாகவும், தன்னுடைய இரு குழந்தைகளை வயதான மாமியாரால் பார்த்துக் கொள்ள முடியவில்லை என்றும், மேலும் இவருடைய உடல்நிலை மற்றும் தன் குடும்பத்தாரின் நிலைமையை காரணமாகக் கொண்டு தனக்கு தாராபுரம் நகராட்சிக்கு மாறுதல் செய்து தரும்படி விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர் அவர்களை தாராபுரம் நகராட்சிக்கு பணிமாற்றம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது.

பார்வை 2-ல் கண்ட மன்றத் தீர்மானத்தில் விண்ணப்பதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது என்றும் காலியாக உள்ள பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடங்களை நிரப்பிய பின்பு கோரிக்கையினை பரிசீலனை செய்யலாம் என தெரிவித்துள்ளது.

தற்பொழுது இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 23.08.2008ம் தேதி 17 பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமதி. பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளர் பார்வை 3-ல் கண்ட விண்ணப்பத்தில் மீண்டும் தாராபுரம் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளார்.

எனவே, திருமதி பி. மகேஸ்வரி, பலநோக்கு சுகாதார பணியாளரை தாராபுரம் நகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு மீண்டும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், தாராபுரம் நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.5855/08/எம்சி.3.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 249 நாள் : 29.09.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 15**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பணியமைப்பு - சட்ட அலுவலர் பதவி – திரு ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர் பதவி உயர்வு கோரியது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக

பார்வை - திரு ஆ. அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர் அவர்களின் விண்ணப்பம் நாள். 11-9-2008

-------------

கோவை மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராகப் பணி புரிந்து வரும் திரு ஆ. அமல்ராஜ் என்பவர், பார்வையில் காணும் தனது விண்ணப்பத்தில், தான் சட்டப்படிப்பு (B.L.degree)படித்துள்ளதால் தமக்கு சட்ட அலுவலராக பதவி உயர்வு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு கோரி விண்ணப்பித்துள்ளார்.

1996 ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது சுகாதார சார்நிலைப்பணிகளில் வகுப்பு 3-ல் உள்ள சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் திரு ஆ.அமல்ராஜ் பணிபுரிந்து வருகிறார்.

1996- ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதி 3-ன்படி மாநகராட்சி பொது சார்நிலைப்பணியில் உள்ள கண்காணிப்பாளர் பதவியில் உள்ளவர்களை பதவி உயர்வு (by promotion) செய்வதன்மூலம் அல்லது மாமன்ற செயலாளர் பணியிலிருந்து மாறுதல் மூலம் (by transfer) அல்லது பிற மாநகராட்சிகளின் சட்ட அலுவலர் அல்லது தலைமைச் செயலக தேர்வு நிலை உதவி பிரிவு அலுவலர் அயற்பணி மூலம் (by deputation) சட்ட அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்பட வேண்டும்.

1996 ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதிகளில் விதி 4-ன்படி சட்ட அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய சட்டப்படிப்பில் பட்டம் அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும் எனவும், அயற்பணி மூலம் நியமனம் செய்ய தலைமைச் செயலக தேர்வு நிலை உதவி பிரிவு அலுவலராகவும் சட்டப்படிப்பில் பட்டம் அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும் எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் உயர்நீதி மன்றத்தில் மாநகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகள் அதிக அளவில் உள்ளதால் இவ்வழக்குகள் தொடர்பான விபரங்களை சேகரித்து வழக்குகளை நடத்திடும் வண்ணம் ஒருங்கிணைத்து செயல்பட மாநகராட்சியில் சட்ட அலுவலர் பணியிடம் மிகவும் அவசியமாகிறது. இம்மாநகராட்சியில் கண்காணிப்பாளர் பதவியில் சட்டப்படிப்பு முடித்த தகுதி வாய்ந்தவர்கள் யாரும் இல்லை. அயற்பணிமூலம் பணியாற்ற ஒருவரும் முன்வரவில்லை.

விண்ணப்பதாரர் திரு ஆ. அமல்ராஜ், சட்டப்படிப்பில் பட்டம் பெற்றுள்ளார். இவரைவிட, பணியில் மூத்தவர்களில் எவரும் சட்டப்படிப்பில் பட்டம் பெற்று, சட்ட அலுவலர் பதவிக்கு தகுதி பெறவில்லை. இவர் சட்ட அலுவலர் பதவிக்கான தகுதியைப் பெற்றுள்ளார். இருப்பினும் இவர் நியமன முறையினை பூர்த்தி செய்யவில்லை. எனவே இவர்பொருட்டு நியமன முறைக்கு விலக்களிக்க மாமன்ற ஒப்புதலுடன் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

எனவே இம்மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு ஆ. அமல்ராஜ் என்பவர் பொருட்டு, 1996-ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதிகளில் விதி எண் 3-ஐ (நியமன முறை) தளர்வு செய்து, சட்ட அலுவலர் பணியிடத்தில் பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 12471/08/ எம்.சி. 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 250 நாள் : 29.09.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. விளையாட்டு மைதானப் பகுதியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான உடற்பயிற்சி கூடத்தில் அதை பயன்படுத்துபவர்கள், ஒரு அமைப்பினை ஏற்படுத்தி மாநகராட்சி உடற்பயிற்சி கூடம் என்ற நிலையினை மாற்றி, அவர்களது சொந்த சொத்தினைப்போல் வைத்துக்கொண்டு உபயோகிப்பாளர்களிடம் மாநகராட்சியின் அனுமதி பெறாமல் அவர்களாகவே கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்துகொண்டு வருகின்றார்கள்.

கட்டண ரசீதுகளிலும் அங்குள்ள முகவரி பலகைகளிலும் மாநகராட்சி பெயர் இல்லை. வசூல் செய்த தொகையினை மாநகராட்சிக்கு செலுத்துவதும் இல்லை. உடற்பயிற்சி கூடத்தினை பயன்படுத்த வருபவர்களிடம் அவர்கள் விரும்பினால் மட்டும் அனுமதிப்பது என்ற நிலை உள்ளது.

இது குறித்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் அறிவிப்பு வழங்கி விபரம் கோரப்பட்டதில் எவ்வித பதிலும் வரப்பெறவில்லை.

வ.உ.சி. விளையாட்டு மைதானப் பகுதியில் மற்ற இடங்களை பயன்படுத்துபவர்கள் மாநகராட்சியிடம் உரிய அனுமதி பெற்று கட்டணம் செலுத்தி வருகின்றார்கள். இந்த உடற்பயிற்சி கூடம் மாநகராட்சிக்குச் சொந்தமானது என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பதால், மேற்படி உடற்பயிற்சி கூடத்தினை மாநகராட்சி பொறுப்பில் எடுத்துக்கொண்டு உபயோகிப்பாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி கட்டணம் நிர்ணயிக்க அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. ஒரு உபயோகிப்பாளருக்கு மாதாந்திர கட்டணமாக ரூ. 200/- நிர்ணயம் செய்யலாம்.

2. காலை 5 மணி முதல் 9.30 வரையிலும், மாலை 5 மணி முதல் 9 மணிவரையிலும் செயல்பட அனுமதிக்கலாம்.

3. முதலில் மாநகராட்சி பணியாளர்களைக் கொண்டும் பின்னர் பொது ஏலம் மூலம் ஒப்படைத்து நிர்வகிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 8909/2008/ அ 5(தெ)

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 251 நாள் : 29.09.2008</u>**

அலுவலகக் குறிப்பு ரத்து செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## சிறப்புத் தீர்மானம் எண் 4

கோவை மாநகராட்சி 65-வது வட்டாரத்திற்குட்பட்ட ராமசாமி நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுவது தொடர்பான தீர்மானம் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பாக மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானத்தின்படி இதுவரை மேற்படி பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக தகுதி உயர்த்தப்படவில்லை.

எனவே மீண்டும் இந்த மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி, வரும் (2009-10) கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக தகுதி உயர்த்தி உத்திரவு வழங்க அரசைக் கேட்டுக்கொள்ளலாம் என தீர்மானம் நிறைவேற்றலாம் என மாமன்ற தி.மு.க. குழுவின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 252 நாள் : 29.09.2008</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## சிறப்புத் தீர்மானம் எண் 5

மறைந்த முதல்வர் மாமேதை பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவினையொட்டி, கோவை மாநகராட்சியின் சார்பாக, திருச்சி ரோடு மாநகராட்சி நுழைவாயில் எல்லையிலும், அவினாசி ரோடு மாநகராட்சி எல்லையிலும், பொள்ளாச்சி ரோடு மாநகராட்சி எல்லையிலும், மேட்டுப்பாளையம் ரோடு மாநகராட்சி எல்லையிலும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவு வளைவுகளை அமைக்க மாநகராட்சி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக்கழக மாமன்றக்குழு சார்பாக சிறப்பு தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 253 நாள் : 29.09.2008**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி